REGD No. M. 4643

# திராவிடநாடு

இலங்கை 15 சதம் விலை அணா 2

மலர் 9 | 20—5—51 | இதழ் 48

# பார்வதி சிரித்தாள்

## பாழாகும் படலம்

"தாயே"

பார்வதிதேவி சிரிப்பை நிறுத்த வில்லை.

சிரித்தாள்—

"அன்னையே"

சிரிப்பைக் குறைத்தாள்—பேச வில்லை.

"தங்கள் புன்னகையின் பொருள்"

"புரியவில்லையோ!"

"ஆம், தேவி"

"உளி கொண்டு, ஒரு சிற்பி, அழகுண்டு பண்ணிய கருங்கல்லுத் தெய்வங்களா?"

"என்ன......"

"அந்தப் பாடல் நினைவிற்கு வந்தது—ஆகவே சிரித்தேன்"

"இந்த ஏழைச் சிற்பி ஏதேனும் அபசாரம் செய்து விட்டேனே?"

"இல்லை"

"பின்......".

"சொல்கிறேன்—கேள், நாங்கள் எல்லாமே, உன் போன்ற சிற்பிகளின் கைத்திறமையின் அத்தாட்சிகளாக வாழ்கிறோம் — அதற்கு, என் கணவரும் நானுமே போதிய சாட்சிகளாகும்"

"தாங்களா, இப்படிப் பேசுவது?"

"உண்மையைப் பேசுவதென்றால், இப்படித்தான் பேசவேண்டும். சோமநாதர் ஆலயம் என்றால் லோகப் பிரசித்தி பெற்றது என்கிறார்கள். ஆனால் என் நாதர் பத்து முறைகள் பாழாக்கப்பட்டிருக்கிறார். நான் பயமின்றி, அவர் பக்கத்திலிருந்த இரவுகள் மிகச் சொற்பம்!

முகம்மதியர்கள், போர்ச்சுகீசியர்கள் பல தடவைகள் பாழாக்கிவிட்டனர்.

ஒவ்வொரு சமயம், ஒவ்வொருவர் எங்கள் ரட்சகராக இருந்து உயிர்ப்பிச்சை யளித்தனர். வல்லபபுர மைத்ரேய அரசர்கள், ஒரு சமயம், கானேஜ், பிரதிஹார் ராஜாக்கள் மற்றொரு சமயம், மாளவ, அரசர்கள் இன்னொரு சந்தர்ப்பத்தில், குஜராத் மன்னர்கள், அதற்கடுத்த பல தடவைகளில் எங்கள் 'பிர்மாக்களாக', வந்திருக்கிறார்கள். அதனால்தான் அந்த பாடலின் அடி எனக்கு நினைப்பில் தைத்தது. அதன் பொருளாழமும் எனக்கு சிரிப்பைத் தந்தது!"

"மன்னிக்க வேண்டும் — இந்த திருப்பணியை நீங்கள் அப்படி நினைக்கக்கூடாது! ராஜேந்திரர் அப்படியல்ல"

"எனக்கும் தெரியும், சிற்பியே! அவர் இந்தியக் குடியரசுத் தலைவர்"

"அதனால்தான் இனி, பாழாகும் படலம் எதுவும் ஏற்படாது என்கிறேன்!"

"சிற்பியே, உளியும், கல்லும் அதிகம் தெரியும் உனக்கு—உலகம் தெரியாது. எங்களை முதல் முதல் இங்குபிரதிஷ்டை செய்தவன் வானவீதியிலேவரும்சந்திரன்இந்த'தேவ விளக்கின்' முயற்சிக்குப் பிறகுதான் பத்து தடவைகள் பாழாகியிருக்கிறோம். ஏழு முறைகள் புனர்ஜன்மம் எடுத்திருக்கிறோம்."

"இனி எவரும் உங்களை எதிர்க்க ஆளில்லை"

"கஜினி படை யெடுக்கு முன்தினம் வரை அப்படித்தான் நினைத்திருந்தோம்"

"ராஜேந்திரர், இன்றைய இந்தியத் தலைவர்—காங்கிரஸ் கனவான்"

"சிற்பியே, என்னுடன் வா காட்டுகிறேன், அவருக்கு நாட்டிலே உள்ள செல்வாக்கை" என்று அழைத்திட, சிற்பி ஸ்ரீ பிரபாசங்கர் திடீரென விழித்துக்கொண்டார். அவர்தான், சோமநாதபுர திருத்த வேலைகளில் ஈடுபட்டுள்ள சிற்பி.

அங்கு, இன்று ஸ்தாபிக்கப்படும் லிங்கம் கருப்பு பளிங்கு கல்லினால் செய்யப்பட்டது. இதனருகே, புன்முறுவல் தவழும் முகத்துடன்

காணப்படும் பார்வதியம்மையின் விக்ரகமும் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காட்சிதான் சிற்பியாரின் கனவிலே ஒரு நிகழ்ச்சியாக வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

## இரட்டைக்கல்யாணம்

சந்திரன், தக்ஷனின் குமாரிகளை மணந்து கொண்டான்.

அவனே ஒருவள் மீது அன்பைக் கொட்டினான். மற்றவர் மீது, ஆத்திரத்தை ஏவினான்.

'மூத்தவளானால் மூலையில்கிட, இளையவளானால் என் அருகே வா' என்று பாடினான், சந்திரன்.

தக்ஷன் காதுகளுக்கு இந்த செய்தி எட்டிற்று. தக்ஷன் அக்கினி மலையானான்—ஆத்திரக் கடலானான்!

"வளரும் கலைகள் இல்லா தொழிக—மருமகனாக இருக்கலாம். ஆனால் அவனுக்கு ஓரவஞ்சனை கூடாது. அழியட்டும் ஆணவம் என்பதற்கே இந்த சாபம்" என்று கூவினான், தக்ஷன்.

பிறகு, சந்திரன் ஓடோடி வந்து ஜ்யோதிர் லிங்கத்தை பிரதிஷ்டை செய்து, தன் சாபம் நீங்கப்பெற்றானாம்!

சந்திரன், சாபம் நீங்க, லிங்க பிரதிஷ்டை செய்தான்—ஆனாலும், அதே லிங்கத்தை மீண்டும், இந்திய தலைவர் ராஜேந்திரர் பிரதிஷ்டை செய்தார்.

ஏன்? எந்த சாபம் நீங்க, இந்த வேலையில் ஈடுபட்டார்? என்ன பாவ காரியம் செய்து, என்ன சாபத்தைப் பெற்று அது நீங்க கழுவாய்ப் பெற்றார்? கேட்கத் தோன்றும் உங்களுக்கு!

ராஜேந்திரர் செய்த பாவம் தெரியாததா? அவர் கலிகாலசந்திரனாயிற்றே! அது மட்டுமா? அவர் தக்ஷா சாபம்பெறாவிட்டால் என்ன, பிரஜா சாபம் பெற்றவராயிற்றே என்று கூறுபவரும் உண்டு!

ராஜேந்திரர், நவீன சந்திரன்—என்ன விந்தை, என்ன ஆச்சர்யம் என்பீர்கள் — நமக்குக் கூடத்தான்! ஆனாலும் சந்திரனாக அவர் இல்லாவிட்டால், கழுவாய் தேடிடும் காரியத்திலே ஈடுபடவேண்டிய அவசியம் என்னவென்று புரியவேண்டுமே!

சந்திரன், தக்ஷனின் குமாரிகள் இருவரை மணந்தான். ராஜேந்திரரும், இந்நாட்டு பிரஜைகளின் சொந்தமான வடநாடு, தென்னாடு என்ற இரு நிலங்களுக்கும்சேர்த்தே தலைவரானார். பூமியும் இங்கு பெண்தான்—பூமாதேவியாயிற்றே! ஆனால் வடநாட்டு வனிதையுடன் கூடிக் கும்மாளமடிக்கவே, தென்னாட்டு தேவி, தந்தையாகிய பிரஜையிடம் கூறவே, 'ஆகா, அப்படியா, அவன் எதனால் என் அன்பைப் பெற்றானோ அந்தக் காங்கிரஸ் கட்சி வளராதொழியட்டும்' என்று சாபமிடவே ராஜேந்திரர் ஓடோடி, கழுவாய் தேடுகிறார் என்று கூறிடும், நண்பர்கள் உண்டு. யூகமும், குறும்பும் சம எடை அவர்களுக்கு!

கலிகால சந்திரன், தொழிலாளி, முதலாளி ஆகிய இரு பெண்களை மணந்து, முதலாளிப் பெண்ணுடன் மோகமதிகரித்து கூடிக்களிப்பதைக் கண்டு, தந்தையாகிய பொதுமக்கள், ஆத்திரங்கொண்டு 'அழிந்து போகட்டும் அவன் ஆணவம், இனி அவன் ஆட்சிக்கு வளர்ச்சியில்லை' என்று சாபமிட்டனர். அது நீங்க குறுக்கு வழி தேடுகிறார் என்று கூறிடும் தோழர்களுமிருக்கிறார்கள் — அவர்களுக்கு, குறும்பைவிட, கோபமதிகம்!

அடக்குமுறை—அன்பு
அதிகாரம்—அரவணைப்பு
சுயநலம்—மக்கள் நலம்
பதவியாசை—நல்லாட்சி
தியாகபேரம்—தந்நலமறுப்பு
எதேச்சாதிகாரம்—ஜனநாயகம்

இப்படி அவர்கள், இரட்டை மனைவியரைத் தேடி மணந்து, எவளுடன் உண்மை உறவு கொண்டாட வேண்டுமோ, அவளிடம் நெருங்காமல், அளவோடு பழக வேண்டியவளிடம், கூத்தாடினால், சாபம் கிடைக்காமல் வரமா, கிடைக்கும்! அதனால்தான் ராஜேந்திரர், கழுவாய் தேடி, லிங்கத்தின் உதவி நாடுகிறார். ஆனால் அந்த லிங்கம் பலன் தருகிறதா, தருமா என்றால், பரிதாபமாகத் தானிருக்கிறது!

பதினாறு கலைகளும் அழிந்து போகுமுன் ஜ்யோதிலிங்க பூஜை செய்து தப்பினான், சந்திரன்.

ராஜேந்திரரின், காங்கிரஸ் கலைகளோ, அழிந்தபடியே உள்ளன.

கிருபளானியின் ஜனநாயக முன்னணி கலைக்கப்பட்டாலும், புதிய கட்சியே தோற்றுவிக்கப் போகிறேன் என்கிறார். பாட்னாவில் அதன் முழு விளக்கம் கிடைக்கும் என்று பேசுகிறார்.

அவர்கள் மந்திரிசபையிலே உள்ள கித்வாயோ, விலகுகிறேன். கிருபளானியுடன் சேர்ந்து கொள்கிறேன் என்கிறார்.

ஆந்திர ரங்கா, ஆத்திரம்தீர பேசித்தள்ளுகிறார்.

வயதான பிரகாசம், வாய் வலிக்க வலிக்க, காங்கிரசின் கண்கெட்ட செயல்களை அலசுகிறார்.

ஓமாந்தூரார், காங்கிரஸ் இனியும் பழைய செல்வாக்கை அடையமுடியும் என்பதிலே எனக்கு துளியும் நம்பிக்கையில்லையென்கிறார்.

இப்படி, காங்கிரஸ் கலைகள் ஒவ்வொன்றாக அழிந்து வருகிறது. அதற்குள் ஜ்யோதிர் லிங்கத்தைத் தேடுகிறார் போலும் ராஜேந்திரர்! சோமனுக்கு உதவியதால், சோமநாதர் என்று பெயராம் — இந்தக் காங்கிரஸ் சோமனுக்கு உதவிடும் சோமநாதர் யார் என்றுதான் புரியவில்லை!

பார்வதி தேவி, சிற்பிக்கு இந்தக் காட்சிவிளக்கத்தை காட்டாமலிருந்திருக்க மாட்டாள் அல்லவா?

## தீர்மான அபிஷேகம்

சோமநாதர் ஆலயம், பலமுறை திருப்பணி செய்யப்பட்டு இப்பொழுது, புது உருவுடன் நிற்கிறது.

இப்பொழுது பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்திற்கு, உலக நதிகளிலிருந்தெல்லாம் நீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்துள்ளார்கள்—மகா சமுத்திரங்கள் எதையும் விடவில்லை.

இமாலயம், சான்பிரான்ஸிஸ்கோ, சிலி, ஆகிய இடங்களில் பசபிக் மகா சமுத்திர நீரும் டடாடெல்ம் பூகோ, பூனஸயர்ஸ்—இந்த இடங்களில் அட்லாண்டிக் மகாசமுத்திர நீரும், கன்யாகுமரி இலங்கை முதலிய இடங்களில் இந்து மகாசமுத்திர நீரும், ஆர்க் ஏன்ஜல் என்ற இடத்தில் ஆர்டிக் சமுத்திர நீரும் திரட்டப்பட்டு கொண்டுவரப்பட்டன.

டைபர், ரைன், தேம்ஸ், நைல், அமேஸான், மிஸிஸிபி முதலிய நதி தீர்த்தங்களும் வந்தன.

இத்தனையும் செய்து, இந்த லிங்க பிரதிஷ்டை நடந்துள்ளது.

இப்படித்தான், காங்கிரசும் கலைந்து போகாமலிருக்க 'பகீரத பிரயத்தனம்' நடைபெறுகிறது.

ஏதேதோ, 'தீர்மான அபிஷேகம்' நடைபெறுகிறது, இந்த லிங்கத்திற்கு, தீர்த்த அபிஷேகம் நடைபெறுவது போல!

ஹ்யூம் துரை காலமுதல், ராஜேந்திரர் காலம் வரை, காங்கிரஸ் பாழாகும் சந்தர்ப்பங்கள் பலமுறை வந்து வந்து போயின. அப்பப்பொழுது பழுது பார்க்கப்பட்டு, கட்டப்பட்ட கோவில்தான் காங்கிரஸ்—இப்பொழுதோ, அது பாழாகும் கடைசி கட்டத்திலே இருக்கிறது. அதற்கு லிங்க பிரதிஷ்டை நடத்த துடிக்கிறார்கள் காங்கிரஸ் தலைவர்கள்.

தாண்டன் தவிக்கிறார்! நேரு நீள நேரப் பேச்சுகளை, நிமிடத்திற்கொரு முறை வீசுகிறார்! ஆஸாத் அலைகிறார்! ஆனாலும், காங்கிரஸ் கோவில் கலைந்திக் கொண்டே வருகிறது!

ஒற்றுமைத் தீர்மானம் போட்டனர். காங்கிரஸ் கமிட்டிகளிலேதான் காங்கிரஸ்காரர், காங்கிரஸ் ஆட்சியைக் கண்டிக்கவேண்டும் என்றனர். பிரிந்து போகிறவர்களை யெல்லாம் பிடித்து நிறுத்தினர்.

சமாதான கமிட்டிகள் அமைக்கத் தீர்மானங்கள் போட்டனர்.

இப்படித் தீர்மான அபிஷேகம், வெகு வேகமாக நடைபெறுகிறது.

இது இப்பொழுது, இதற்கு முன் பாழாகும் படலங்கள் பல உண்டு.

சுபாஷ் எதிர்த்தபொழுது, ஜின்னா, லீக் இயக்கம் துவங்கிய போது, பெரியார் பிரிந்தபோது, திரு. வி. க. திரும்பிப் பாராமல், காங்கிரசை விட்டு வெளியே நடந்தபொழுது, டாக்டர் வரதராஜுலு விலகியபொழுது, இப்படிப் பல சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் கலகலத்த பொழுதெல்லாம் ஒவ்வொரு 'சோமநாதர்' தோன்றச் செய்து. கோவில் திருப்பணி நடந்துவிட்டது!

கலைகளழிந்து போகட்டும் என்ற சாபம் கிடைத்தவுடன், சந்திரனுக்கு சோமநாதர் அருள் கிடைத்தது—அவன் ஜ்யோதிர் லிங்க பிரதிஷ்டை செய்து பூஜை பண்ணியதால்!

அதுபோல, காங்கிரஸ் கலைகழிந்துபோகும் சந்தர்ப்பம் வரும் பொழுதெல்லாம் பிரதிஷ்டை செய்த சோமநாதர், சுந்தரமான வார்த்தைகள்தான்—அதுவும் இந்த நான்காண்டு காலத்தில் அவர்களுக்கு அபயமளித்துள்ள சோமநாதர், சோபிதமிக்க சொல்லலங்காரந்தான்!

எவர், எக்குறையை எடுத்துக் காட்டினாலும், காங்கிரஸ் சந்திரன் ஓடோடிச் சென்று, ஒரு சோமநாதரை பிரதிஷ்டை செய்து பூஜை செய்வான்.

சுதந்திரம் பெற்றவர்கள் நாம்.

வெள்ளையர்களை விரட்டிய வீரர்கள் நாம்.

சுதந்திரம் சிறுகுழந்தை—அதற்குள் அவசரப்படலாமா?

இன்று யாரும், எதையும் செய்துவிட முடியாது!

தியாகிகள் நாங்கள் — ஆகவே மந்திரிகளும் நாங்களே.

விடுதலைப்போர் நடத்தியவர்கள் தான், ஆள்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

இப்படி, புதுபுது சோமநாதர்களை உண்டாக்கித் தப்பித்துக் கொள்ள காங்கிரஸ் முயற்சி செய்தும் முடியவில்லை.

கஜினி படையெடுப்புபோல, அப்பப்பொழுது, இந்த உளுத்துப் போன வாதங்களுக்கு விடையளிக்கப் படுகிறது—ஆகவே, இந்த வீரர்கள், சோர்ந்து விடுகின்றனர்'

சோமநாதரைத் தேடுகின்றனர் அவர்கள். தேடித் திருப்பணி செய்தாலும், மீண்டும் பாழாக்கப்படுகிறது. சரித்திரம் திரும்புகிறது—யாரென்னசெய்யமுடியும்?

## கருப்புக்கொடி!

மதச்சார்பற்ற சர்க்காராம் இது—இதன் தலைவர்தான், இந்துமதக் கோயில் திருப்பணிக்குத் தலைமை வகிக்கிறார்.

இக்கோயில் திருப்பணியை நடத்தத் தூண்டியவர், மறைந்த பட்டேல், அவர் இந்நாட்டின் உள்நாட்டு மந்திரியாக இருந்தவர். அவர் சேர்த்துதந்தது முப்பது இலட்சம்.

மதச்சார்பற்ற சர்க்காரின் பிரதிநிதிகள் இப்படி மதக்காரியங்களிலே ஈடுபட்டனர்.

பட்டேலின் பெயராலேயே, ஒரு பகுதி அழைக்கப் படுகிறது.

ராஜேந்திரரோ, லிங்க பிரதிஷ்டைப் பிரசங்கத்திலே வெளிப்படையாகப் பேசியுள்ளார்.

### நான் ஒரு சனாதன இந்து

குடியரசுத் தலைவர் உதிர்த்த பொன்மொழி இது. அவர் ஒரு சனாதன இந்துவாம். அவர் பேசுவதோ மதசகிப்புத்தன்மை! அவர் வேண்டுவதோ, மத வெறியை விரட்டியடிக்கத் திட்டம். எப்படி முடியும்?

அவர் சனாதன இந்து என்று சொல்லிக்கொண்டு மதசகிப்புத் தன்மை எப்படி வரமுடியும்?

எந்த மதத்தாலும் கடவுளை அடைய முடியும் என்று அவர் நம்புகிறாராம். பிறமதங்களை நம்புவதுடன், அவர்தம் ஆலயங்களுக்குச் சென்றும் வணங்குகிறாராம். இப்படிக் கூறுகிற அவர், சனாதன இந்துவாம்!

அவர் சென்றிருந்த தேவபட்டினத்திலே ஒரு நிகழ்ச்சி!

ராஜேந்திரருக்கு கருப்புக் கொடி பிடித்துள்ளனர். இங்கே கருப்புக் கொடி பிடித்திடும் பொழுதெல்லாம், தெருப்புழுதியை குருதிச் சேறாக்குகிறார்கள் - ஆனால் அங்கு அம்மாதிரி ஏதும் நடந்ததாகத் தெரிய வில்லை!

கருப்புக் கொடி ஏந்தி நின்றனர் எல். ஜி. தாட்டேயும், அவர் தம் கோஷ்டியாரும்! ராஜேந்திரர் வந்ததும் காட்டினர். காரணம் என்ன தெரியுமோ? தேவபட்டினத்திற்குள்ளே, சிலஇந்துக்களல்லாதாரும் அனுமதிக்கப் பட்டு விட்டனராம். அந்தப் பாவ காரியத்திற்குக் காரணம் ராஜேந்திரர் தானாம்—அதற்காகவே கருப்புக்கொடி பிடித்தனர்!

இந்தக் கருப்புக் கொடியைக் கண்டபிறகும், ராஜேந்திரர்தான் ஒரு சனாதன இந்துதான் என்கிறார் கருப்புக்கொடி பிடித்தவர்களும் சனாதன இந்துக்கள் தான்!

சௌராஷ்டிர ராஜப்பிரமுகர் வந்

திருந்தார். அவர் கர்ப்ப கிரகத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை. மரியாதையாக புரோகிதர்கள் கூறினர். அவரும் ஏற்றுக்கொண்டார். அவர் இணக்கத்தைக் கண்டு, கூடியிருந்தோர் கரகோஷித்தனர். ராஜேந்திரர் எந்த மதக்கோவிலுக்கும் நான் போவேன் என்கிறார். இதோ, ராஜப்பிரமுகரை மறுத்துவிட்டனர் உடை விஷயமோ, உள்விஷயமோ, காரணத்தைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் சனாதன இந்துக்கள்தான் தடுத்தனர். கரகோஷித்தவர்களும் சனாதன இந்துக்கள்தான். இந்தக் காட்சிகளைக்கண்ட பிறகும், அவர், தான் சனாதன இந்து என்கிறார்!

ராஜேந்திரர் பேசியதோ வேறு—நடந்ததோ அதற்கு நேர்மாறு!

"பண்டைக்கால அரசியல் பொருளாதார சமூக நிலைமைகளையோ மதமாச்சர்யங்களையோ உயிர்ப்பிப்பது இந்த சடங்கின் நோக்கமன்று. இந்நாட்டில் நிலவி வரும் நம்பிக்கையை நிலைநாட்டவே இந்த ஆலயத்தை நிர்மாணிக்கிறோம்" என்று பேசியுள்ளார்.

நாட்டில் நிலவிவரும் நம்பிக்கை என்ன?

"இதயத்தில் நம்பிக்கையும், அன்பும் நிறைந்த மக்களால் ஆராதிக்கப்படும் உன்னத லட்சியத்தை எத்தகைய சக்திமானும் அழிக்கமுடியாது என்பதையே இது 'காட்டுகிறது'' என்றார் அவர்.

அந்த நம்பிக்கைதான் எதுஎன்று சொல்லவில்லை அவர். மறந்தாலும் நமக்குத் தெரிகிறது.

ராஜப்பிரமுகரை வெளியில்நிறுத்தினர். மரியாதையாக கூறி நிறுத்தினர் புரோகிதர்கள். அவர் வருவது தவறு என்பது அவர்கள் நம்பிக்கை!

சில இந்துக்களல்லாதார் உள்ளே அனுமதிக்கப்பட்டுவிட்டனர். இது காட்டே கோஷ்டியாரின்நம்பிக்கை!

நேற்றுவரை எட்டுகோடி ஆதித்திராவிடர், கோயில்களில் நுழைவதுகூடாது என்று கூறினர். நந்தனை எரித்துச் சாம்பலாக்கினர். திருப்பாணாழ்வாரைக்கல்லாலடித்து விரட்டினர். ஆண்டவனே ஏற்றுக்கொண்டாலும் இவர்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. இதுகூட அவர்கள்நம்பிக்கைதான்!

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்பது கீதை வாக்கு என்கின்றனர். அந்தப் பிரிவுகள் இருப்பதே சமூகத்தின் வாழ்வு என்று நம்புகின்றனர்.

ஜாதியாசாரம் கெடக்கூடாது—ஜாதிகள் நிலைத்திருக்கவேண்டும். கலப்புத் திருமணம் கூடாது என்கின்றனர். இதனை மிகவும் உறுதியாக நம்புகின்றனர். தப்பி ஏதாவது ஜாதியாசாரம் கெடும் முறையில் நடந்துவிட்டால், சல்லடங்கட்டுகின்றனர்.

பெண்களை, அடிமைகளாக்கி வைத்திருக்கின்றனர். இதுவும் அவர்களின் நம்பிக்கைதந்த ஏற்பாடுதான்!

இந்த நம்பிக்கை நிலைத்திருக்க வேண்டுமென்கிறார், ராஜேந்திரர்.

ஆம், அவர் தன்னை ஒரு சனாதன இந்து என்று கூறிக்கொள்ளும் பொழுதே இவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்கிறார் என்றுதான் அர்த்தம்!

மதச்சார்பற்ற சர்க்கார் என்று கூறிவிட்டு, கலியுகச் சந்திரனாகிறார் ராஜேந்திரர். இது கேலிக்குரிய காட்சிமட்டுமல்ல, கேள்விக்குரிய நிகழ்ச்சி!!

சிற்பி, பிரபாசங்கர் பார்த்து, கேட்டு அறிந்தபின், சிரித்து அவர் சிந்தனைக்கு வேலைதந்த பார்வதியம்மையிடம் சொல்லுவார், முடியுமானால்! கேட்டுச் சிரிப்பாள் பார்வதி, அதுசாத்தியமானால்!

★



**சரோஜா — சுப்பிரமணியம்**

திராவிட முன்னேற்றக் கழகச் செயல் வீரரும், சேலம் நெசவாளர் தலைவருமான தோழர் ஏ. சித்தையன் அவர்களின் திருச்செல்வி சரோஜா—திரு. பி. வி. சுப்பிரமணியம் வாழ்க்கை யொப்பந்தம் 9—5—51 அன்று நடைபெற்றது. பழைமைச் சடங்குகள் எதுவுமின்றி, நடைபெற்ற மேற்படி பதிவுத் திருமணத்தில் நகரப் பிரமுகர்களும் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர். புதுமணம் பெற்ற மணமக்களுக்கு நமது வாழ்த்துகள்.

# பிரமாத விருந்து

வேடிக்கையான விருந்தொன்று டில்லிஞஸ் என்ற இடத்திலே நடைபெற்றிருக்கிறது. அங்கே உள்ள ஒய். எம். சி. ஏ. பல்கலைக் கழகத்தினர், விருந்து ஒன்று நடத்தப்போவதாகவும், அதற்கு ஒரு டாலர் கட்டணம் என்றும் விளம்பரப்படுத்தினர். வாடிக்கையான விருந்துதானே — வேடிக்கையாகச் சென்று வரலாம் என்ற கருத்தோடு விருந்தினர்களும் வந்தனர். அலங்கரிக்கப்பட்டிருந்த விருந்து மண்டபத்தில் நுழைந்தனர். அமர்ந்தனர். ருசிகாணத்துடிக்கும் அவர்கள் ஆசைக்கு பசி மத்தளம் கொட்டிற்று. 'வரும், வரும்' என்று வாய் உச்சரித்தது. 'என்னென்ன வகைகளோ?'' என்று ஒவ்வொருவரும் பேசிக் கொண்டனர். விருந்துக் கட்டணம் ஒரு டாலர் அல்லவா— விதவிதமான வகைகள் நம்விருப்பப்படி கிடைக்கலாம் என்றனர். விருந்து நேரம் வந்தது. விழிகளிலே ஆவல், வயிற்றிலே பசி, வாயிலே நீர், அவரவர்கள் தங்கள் மேஜைகளில் கண்ணைப் பதித்தனர். எல்லா மேஜைகளிலும் ஒவ்வொரு கோப்பை கொண்டுவந்து வைக்கப்பட்டது. கோப்பை வந்துவிட்டது —அடுத்தபடி 'பிளேட்' வரும் என்று எதிர்பார்த்தனர் விருந்தாளிகள். ஆனால், எதிர்மாறாக, ஒவ்வொரு கோப்பையிலும் விருந்துக்கு அழைத்தவர் வெறுந் தண்ணீரை ஊற்றிக்கொண்டு போனார். தண்ணீர் முதலில் வைக்கிறார்கள்— சிறிது நேரத்தில் நம் ஆசைக்குரிய பலகாரங்கள் பரிமாறப்படலாம் என்று எதிர்பார்த்தனர். நிமிடங்கள் ஓடிக்கொண்டேயிருந்தன. எதிர்பார்த்தபடி எதுவும் வரவில்லை.

விருந்தினர்களிடையே முணுமுணுப்பு — ஆத்திரம். 'எங்கே, சாப்பாடு?'—கேள்விகள் பறந்தன. விருந்திட அழைத்தவர் வந்தார், சிரிப்போடு. சிரிப்பைகண்ட விருந்தாளிகள் சீறினர். அவரோ, சிரித்தவாறே அவர்கள் சிந்தனைக்கு சிறிது வேலைதந்தார்.

"சீமான்களே! வழக்கம்போல் ஆடம்பரமான விருந்தை எதிர்பார்த்தே வந்திருப்பீர்கள். ஆனால் இன்று நான் அத்தகைய விருந்துக்கு ஏற்பாடு செய்யவில்லை. அடிக்கடி அதுபோன்ற விருந்துகளுக்கு நானும் அழைத்திருக்கிறேன் நீங்களும் வந்திருக்கிறீர்கள். அப்போதெல்லாம் விருந்து முடிந்ததும் பலகாரவகைகளைப் பற்றியும் பரிமாறியவரின் திறமை குறித்தும் பேசிக்கொண்டும், பாராட்டிவிட்டும்போய் விடுவீர்கள். இது, தினசரி, இங்கு மட்டுமல்ல, பல இடங்களில் இது போன்ற விருந்துகள்தான் நடக்கின்றன. ஆனால் என்னுடைய விருந்தின் நோக்கம் அதுவல்ல. உங்களுடைய வயிற்றுக்கு அல்ல நான் இன்று வைத்த விருந்து; சிந்தனைக்கு.'' என்று குறிப்பிட்டுவிட்டு, தன் விருந்தின் நோக்கத்தை விளக்கினாராம்.

"ஏராளமான மக்கள் இந்திய நாட்டில் பசியால் தவிக்கிறார்கள்! பஞ்சமும் பட்டினியும் வாழப் பிறந்த அந்த மனிதக் கூட்டத்தை, மண்புழுக்களாக்கி வருகிறது. மாள்கிறார்கள் — சாகிறார்கள். இந்த கோரக் காட்சிகளைப் பற்றி நான் தினசரி செய்திகள் கண்டேன். ஆதலேதான் இந்த விருந்தை ஏற்பாடு செய்தேன். தண்ணீர் மட்டும் தந்தேன். ஆனால் அதற்கு விலையாக ஒரு டாலர் வாங்கிக் கொண்டிருக்கிறேன். விளையாட்டுக்கல்ல. இதனால் சேர்ந்த தொகையைக்கொண்டு ஒரு வாகன் கோதுமை வாங்கி இந்தியாவுக்கு கப்பலேற்றப் போகிறோம். இந்த முயற்சியில் நீங்களெல்லாம் பங்கு கொள்ள வேண்டும். அப்போதுதான் நமது நல்லெண்ணம் வெற்றியாகும். ஆகவே "இந்தியாவுக்கு உணவு உதவி" இயக்கத்துடன் நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும்'' என்பதாக விருந்திட அழைத்தவர் விளக்கினாராம். விருந்தாளிகள், விஷயம் புரிந்ததும், கோபத்துக்குப் பதில் குதூகலம் கொண்டனராம்! நல்ல காரியத்துக்கு நம் காசும் சேர்ந்தது—என்றனராம்.

விசித்திரமான விருந்து. ஆனால் அதன் மூலம் சிந்தனையில் தேள் கொட்டச் செய்திருக்கிறார், விருந்திட்டவர். விருந்து நடைபெற்ற இடமோ, இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ளது. ஆயினும் இந்தியாவின் பரிதாப நிலை, அந்தப் பரோபகாரியின் நெஞ்சத்தைத் தொட்டிருக்கிறது.

வெளிநாட்டில், இத்தகைய அனுதாபம்! ஆனால், இங்கு?

மாடமாளிகைகளிலே விருந்துக்கும் விநோத உபசரிக்கும் குறைவில்லை. விண்விருந்துகள், விரும்பத்தகாத நேரங்களில், வித விதமான முறைகளில்!

வாழப் பிறந்தவர்கள் — வாட முடியுமா அல்லது பிறர் வாடுவதைக் கண்டு வருந்தத்தான் செய்வார்களா? சீமான்கள் அவர்கள்—இந்தச் சிறு விஷயத்திலா சிந்தையைச் செலுத்துவர்! சீமான்களின் மாளிகைகளிலே சிரிப்பொலியும், தேன் பேச்சும், எப்போதும் போலவே இருந்து கொண்டிருக்கிறது. கும்பாபிஷேகங்கள், குவலய மூர்த்திக்கு திருவிழாக்கள், கருடசேவை, கடவுளுக்குக் கல்யாணம்—ஏராளமான செலவு!

இந்தக் காட்சிகளைக் கண்டு கொண்டிருக்கிறது சர்க்கார். காண்பது மட்டுமல்ல, சர்க்காரை நடத்தும், 'சத்யாக்ரக' பரம்பரையினர், செய்யும் காரியங்கள்...... வர்ணிக்க வார்த்தைகளில்லை. வெளிநாட்டிலே, தண்ணீரை விருந்தாக வைத்து, பணம் சேகரித்து, உதவ முன் வருகிறார்.

இங்குள்ள இலட்சாதிபதிகளோ, வீணான விஷயங்களில் உணவுப் பொருள்களை விரயமாக்கிக் கொண்டுள்ளனர்.

நாட்டை ஆளும் சர்க்காரோ வேதனையோடு பேரம் பேசிக் கொண்டு கிடக்கிறது.

ஒரு விருந்து நடைபெற்றதாம், நமது மாகாண உணவமைச்சர் விக்டோரியா வீட்டில், இந்த மாதம் முதல் வாரத்தில்.

விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், விக்டோரியாவை

(8-ம் பக்கம் பார்க்க)

## பெயரிடு விழா

திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழியர் அலமேலு — பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை ஆகியோரின் அன்புக்குழந்தைக்கு 1—5—51 அன்று சி. என். ஏவால் மல்லிகை என்ற பெயரிடப்பட்டது.

திராவிட நாடு

ஞாயிறு] 20—5—51 [காஞ்சி

# ★ திருக்கூத்து ★

குருடர்கள்—மனித வாழ்விலே பரிதாபத்துக் குரியவர்கள். அவர்களைக் காண்போருக்கு இரக்கம் சுரக்காமற் போகாது. தண்டு ஊன்றி தள்ளாடிச் செல்லும், அவர்களின் நடை, விழியிலே புனலைத் தேக்கும். உலகம் எதுவென்று அவர்களுக்குத் தெரியாது. ஒளியென்று சொல்வது, புரியாதவர்கள் அவர்கள். இருட்டே அவர்களது காட்சி! எங்கும் இருட்டுத்தான் தென்படும் — ஆனால், அதைக்கூட 'இருட்டு' என்று புரிந்துகொள்ள முடியாது அவர்களால். வேதனைக்குரியவர்கள், அவர்கள். 'அம்மா! அப்பா!!' என்று பிறர் அழைப்பது காதில் விழும். ஆனால் 'அப்படி யென்றால் என்ன?' —இது அவர்களுக்குத் தெரியாது. மாடென்றும் ஆடென்றும் சொல்கிறார்களே, அதுவெல்லாம் எதுவோ? சாப்பிடுகிறேன் ருசியாக இருக்கிறது, அது என்னவோ? சட்டையென்று சொல்லி மாட்டிவிடுகிறார்கள், அது எப்படியானதோ? இப்படியெல்லாம் அந்தத் துர்ப்பாக்கியசாலிகள் எண்ணாமலிருக்க முடியாது. பிறவிக் குருடர்களைப் பற்றிய சிந்தனை எவரையும் பித்தராக்கிவிடும்! குருடர்கள், தங்களையே உணராதவர்கள், எதையுமே அறியாதவர்கள்!! எல்லோரது இரக்கத்துக்கும் உரியவர்கள்!!!

இத்தகைய மனித ஜீவனின் பரிதாபங் கண்டு, அவர்கள் வாழ்விலும், இன்பமூட்டும் இலட்சியத்துடன் பலர் பணியாற்றி வருகின்றனர். வாழ்வின் மணத்தை நுகரமுடியாத துர்ப்பாக்கியர்களுக்குச் சேவை செய்வதென்பது மகத்தான சாதனை. போற்றற்குரிய பொற்பணி. ஆறுகால பூஜையும், அந்தி சந்தி மணியோசையும், அக்காரவடிசனும், அர்த்தராத்திரி கதவடைப்புமாக தங்கள் திருச்சேவையை 'கனகச்சிதமாக்'ச் செய்துவரும் இந்து மதக் குருமார்களின், ஊனக் கண்களுக்கு இந்த உருக்கமானவர்கள் தென்படாவிட்டாலும், இயேசு காட்டிய பாதையில் பணிபுரியும் பலர் இந்த 'சாமான்ய' காரியத்தை மிகவும் ஆர்வத்தோடு செய்து வருகிறார்கள் —பல்லாண்டுகளாக.

"குருடனைப் படைத்து விட்டான் பரமன். என் செய்வது' இது அவர்கள் முற்பிறப்பிலே செய்த கர்மத்தின் பலன். தலையெழுத்து—நாம் என்ன செய்ய முடியும். இறைவன், ஈசன், என்னப்பன் திருவிளையாடலை யாரே உணர முடியும்?'' என்று அந்தாதியும் அகவலும் பாடும் கூட்டமுண்டு, நமது இந்து மதத்திலே. "குருடனா—ஐயோ! கர்மம்—போகிற காரியம் விடியாதே. இந்தச் சனியன் முகத்தில் விழித்து விட்டேனே!'' என்று சகுனம் பார்க்கும் சனாதன பிம்பங்களும் நிறைய உண்டு, இங்கே.

ஆனால், ஒளியிழந்த அந்தத் துர்ப்பாக்கியசாலிகளை, 'ஒத்திப் போ!' என்று அதட்டாமல், 'சனியன்' என்று அழைக்காமல், அன்பால் அணைத்து, கருணையால் குளிப்பாட்டி, சேவையால் சீர்பெறச் செய்யும், சிறந்த நற்பணியை நல்லோர் பலர், செய்து வருகிறார்கள்.

இந்த நற்பணியிலே குறிப்பிடக் கூடிய ஒன்று, ஒளியிழந்த அந்த உருவங்களுக்கும் படிப்புச் சொல்லிக் கொடுத்து, அவர்களையும் எழுத்தறிவுள்ளவர்களாக்குவது.

இது சாதாரணமான பணியல்ல. ஆனால் வெகு சாதுர்யமாகச் செய்யப்பட்டு வருகிறது. படிப்போடு கூட, உருப்படியான சாமான்களையும், ஒளியிழந்தோர் மூலம் செய்வித்து வருகிறார்கள். சிறு சிறு சாமான்கள், குடும்பத் தேவைக்கான பொருள்கள், ஆகியவைகளை செய்யச் சொல்லி, கற்றுக் கொடுத்து, வருகிறார்கள்—குருடர்கள் பள்ளியினர். இந்த அருஞ்செயல் மூலம், உபயோகத்துக்கான பல பொருள்கள், உற்பத்தி செய்யப்படுகின்றன.

இத்தகைய ஒரு அரிய சேவையிலீடுபட்டிருக்கும் சில ஸ்தாபனங்களில் ஒன்று, பாளையங்கோட்டையிலிருக்கும் குருடர் பள்ளியுமாகும்.

அந்தப் பள்ளியின் தலைவரான எம். சி. லாங்டன் என்ற பாதிரியார் மனம் நொந்து வேண்டுகோள் ஒன்றை வெளியிட்டுள்ளார் 'மெயில்' இதழ் மூலம்.

மனித வாழ்க்கையை மிருகப் பிராயத்துக்கு ஓட்டிச் செல்லும் காங்கிரஸ் சர்க்கார், குருடர்கள் தலையிலும், கைவைத்திருக்கிறதாம். இரும்பும் இளகும், குருடர்களைக் கண்டால்! ஆனால் இந்தக் காருண்ய சர்க்காரோ, கபோதிகள் வாழ்விலே 'கையளவு மண்' அள்ளிப் போடுகிறது!!

குருட்டுச் சிறார்கள் தட்டுத்தடுமாறிச் செய்யும் பொருள்கள்மீது விற்பனை வரி கட்டவேண்டுமென வலியுறுத்தியுள்ளனராம்.

விற்பனை செய்யப்படும் எப்பொருளுக்கும் வரி உண்டாதலால் குருடர்கள் பள்ளியிலிருந்து உற்பத்தியாகி விற்பனை செய்யப்படும் பொருள்களுக்கும் 'வரி' செலுத்தத்தான் வேண்டும் என தாக்கீது பிறப்பித்திருக்கிறார்களாம். தத்தித் தவழ்ந்து, செய்யப்படும் ஒரு நற்காரியத்துக்குத் தங்களாலான உதவி செய்ய முடியாவிட்டாலும், அதன் 'மென்னி'யைப் பிடிப்பதில், தயங்குவதில்லை, இந்த மெருகு குலையாத மேனியாளர்கள்.

மேற்படி பள்ளியின் நிர்வாகி, தமது ஸ்தாபனம் பொருள் வசதியற்றுத் திண்டாடும் நிலையில் விற்பனை வரி வேறு கட்டச் சொன்னால் என் செய்வது, என்று ஆட்சியாளரிடம் சென்று எடுத்துச் சொன்னாராம்.

'நாங்கள் பொருள்களை விற்கிறோம். வாங்கியோரிடமிருந்து விற்பனை வரி வசூலிக்கவில்லை. இரண்டு ஆண்டுகளாக இப்படித்தான் செய்து வருகிறோம். இப்போது திடீரென்று வரி கட்டுமாறு உத்தரவிட்டிருக்கிறீர்கள். நாங்கள் எங்கே போவோம்? பொருள்களை வாங்கிச் சென்றோரிடம் சென்று இனி வசூலிக்கமுடியும். எங்கள் பள்ளி நிதியிலிருந்துதானே தரவேண்டும். தரலாமென்றாலும் பள்ளி நிதி பாலைவனம் போலத்தானே இருக்கிறது. என் செய்வோம்'' என்று, வேதனையோடு விளக்கினராம்.

அதற்கு "என் செய்வோம். சட்டம் இடங் கொடாதே!'' என்று செப்பி விட்டனராம் — நமது மாகாண மதியூகிகள்.

சட்டம் இடம் கொடாதாம்! அப்படிச் சட்டம் இடம் கொடாத அளவுக்கு அந்தக் குருடர்கள் பள்ளியினர் கட்ட வேண்டிய விற்பனை வரி எத்தனை லட்சம், எவ்வளவு ஆயிரம் என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு. மிகப் பொறுப்போடு சட்டம் இடங்கொடாது என்கிற காருண்ய மூர்த்திகள் செப்பிய தொகை, மிகமிகக் கொஞ்சம்! நமது மந்திரிமார்கள் சம்பளத்திலே கால்பகுதிகூட வராது! ஒரு விருந்துக்கு செலவழிக்கும் தொகை கூட அல்ல! வீட்டு 'அம்மா'வுக்கு வாங்கித் தரும் பட்டுச் சேலைக்காகும் காசளவுகூட அல்ல! — கதர்ச் சேலையல்ல — ரூ. 300! மூன்று நூறு ரூபாய்கள்!! — இதற்குத்தான் தாக்கீது, 'சட்டம் இடம் கொடாது,' என்ற விளக்கம்!

ரூ 300 மீது இவ்வளவு சிரத்தையும் அக்கறையும் இருக்கிறது நமது மாகாண சர்க்காருக்கு, விற்பனை வரி விஷயத்தில்.

ஆனால் பல லட்சங்கள், பறிபோய்விட்டன, மாகாண நிதியிலிருந்து; பறி போயின என்பதைவிடப் பறிக்கப்பட்டுவிட்டன.

இதே விற்பனைவரி விஷயத்தில் தான், அவ்வளவு இலட்சங்களும் பறிக்கப்பட்டிருக்கின்றன, டில்லி சர்க்காரால் கடந்த எப்ரல் முதல் தேதி முதல்.

எந்தச் 'சட்டம் இடங்கொடாது' என்று ரூ 300க்குப் பதில் சொல்லியிருக்கின்றனரோ அதே சட்டத்தைக் காட்டித்தான் அவ்வளவு தொகை, நமது நிதியிலிருந்து, போயிருக்கிறது.

முன்பெல்லாம், நமது மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்குப் பொருள்களை விற்பனைசெய்தால், அதற்கு விற்பனை வரி வாங்கும் உரிமை, மாகாண சர்க்கார்களுக்கிருந்தது. நமது புது அரசியலமைப்பு மூலம் 'கொள்ளை'கொண்டு விட்டனர். அப்போது, அக்கறையோ சிரத்தையோ தோன்றவில்லை இந்த 'ஆபத்பாந்தவர்களுக்கு'! லட்சங்கள் போயின இலட்சியம் செய்யவில்லை. இப்போது குருடர்கள் பொருள் மீது கொக்கரிக்கின்றனர்!

வேதனையான நிலை என்பீர்கள், விஷயம் உணராததின் விளைவோ என்று கூடச் சொல்வீர்கள். விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் வீழ்ந்தானுமே ஒருவன், அவனைவிடக் கேவலமாகத் தோன்றும் இவர்தம் போக்கு.

வரவேண்டிய வரியையும் இழக்கின்றனர்.

வந்த வரியையும் வீணாக்குகின்றனர்.

ரூ 300க்கென, 'சட்டத்தை'க் காட்டிய இத்தயாபரர்கள் செலவழிக்கும் பணத்தொகையின் பட்டியலை நாம் பன்முறை விளக்கி வந்துள்ளோம்.

அதே நேரத்தில், பணமில்லாததால், இவர்கள் படும் அல்லலையும் எடுத்துக் காட்டியுள்ளோம்.

ஆட்சிப் பொறுப்பை நிர்வகிப்பதிலுள்ள தொல்லையும் சிரமமும் அறியாதவர்களல்ல, நாம். ஆகவே பலமுறை நாம் அனுதாபங் கூடக் கொள்வதுண்டு, இவர்கள் மீது.

விஷயமறியாத குழந்தை, விஷத்தை வைத்துக்கொண்டு விளையாடினால் தடுக்கத்தான் செய்வர். தடுத்தும் கேட்காவிடில், அடித்தாவது அடக்குவர். ஆனால் அடிக்கவும் தடுக்கவும் ஆள் யாருமில்லையென்ற ஆணவத்தால் இவர்கள் ஆடும் திருக்கூத்தைக் கண்டு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

குருடர்கள் ஸ்தாபனம், ஒரு சிறந்த பொதுப்பணி இயக்கம்; அது கட்டவேண்டிய ரூ 300க்கு சட்டத்தைக் காட்டிய இந்த 'சரணாகதி சர்க்கார்' அண்மையில் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

கேட்டாலே சிரிப்பீர்கள்! எல்லோரும் கதர் உற்பத்தி செய்வதற்கான, உத்தரவு அது. கடந்த ஐந்து ஆண்டுகளாகவே இந்த வீணாசைக்காக, பிர்க்கா அபிவிருத்தி யென்ற பெயரால் விரயமாகியிருக்கும் தொகை பல இலட்சங்களாகும்.

இருந்தும் எந்தப் பிர்க்காவிலும் இத்திட்டம் பிரயோசனப்படவில்லை. ஆங்காங்கே கொண்டுபோய்க் குவிக்கப்பட்ட சர்க்காக்கள், வாங்குவோரின்றி, 'விதவை பெற்ற பாலகனாய்' விட்டனவாம். எனவே, இப்போது அவைகளை எல்லோர் தலையிலும்கட்டும் நோக்குடன் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி எல்லோருக்கும் சர்க்காக்கள் தரப்படுமாம்: அவைகளைப் பெறுவோர் உடனடியாகப் பணம் தரவேண்டியதில்லையாம் — பலதடவைகளில் சிறு சிறு தொகையாகத் தந்தால் போதுமாம்.

இதுபோல முன்பொருமுறை, ஒரு உத்தரவு அரும்பி, மலருமுன்னரே, கருகிப்போயிற்று.

இப்போது இந்தக்கட்டளை புறப்பட்டிருக்கிறது.

கதர் அபிவிருத்தி என்ற பெயர் கூட, இப்போது பலருக்கு நினைவிருக்காது. காரணம், காந்திய மகாத்மீயத்தில் ஒன்றாகக் கருதப்பட்ட அது, இப்போது இறந்துவிட்டது. கதர், சுதந்திரப் போராட்டத்துக்கு ஒருவழியாகக் கருதப்பட்டது. இப்போது, அது தானாகவே மடிந்துவிட்டது.

மடிந்தாலும், அதற்கு மணிமுடி சூட்டவிரும்புகிறார்கள், மதோன்மத்த நிலையிலுள்ள இம்மகாத்மா சீடர்கள்.

கதர் திட்டத்தின்மூலம் 1947, 48, 49, ஆகிய மூன்றாண்டுகளிலும் 37½ லட்ச ரூபாய்கள் வீணாகியிருக்கின்றன. 1948—49ம் ஆண்டில்மட்டும் 13·35 லட்சம் பலியாயிற்று! அந்த ஓராண்டில் அவ்வளவு செலவழித்தும் அதன்மூலம் கிடைத்த வருமானத்தொகை 7·59 லட்சம் தான்.

அதாவது போட்ட முதல் திரும்பவில்லை! கணக்கு நஷ்டம் — அதுவும் இலட்சக்கணக்கில்!!

இருந்தும், புது உத்தரவு போட்டிருக்கிறார்கள் 1951 — 52க்கு ரூபாய் 20·22 லட்சம் செலவழிப்பது என்பதாக.

செத்துவிட்ட திட்டத்துக்கு, 'வளையல் வாங்கலையோ' மெட்டில் 'சர்க்கா வாங்கலையோ' என்ற கூப்பாடும், அதற்காக இருபது லட்சம் பணவிரயமும்.

இத்திருக்கூத்தை என்னவென்று சொல்வது! குருடர்கள் தரவேண்டிய சாதாரண முன்னூறுக்கு 'சட்டம்' பேசுகின்றனர். நிதியமைச்சர் நான் வேண்டுமானால் நன்கொடையாக ரூ 50 தருகிறேன் என்கிறார்—கேலி பேசுவதுபோல.

ஆனால், வீண்காரியத்துக்குஇலட்சக்கணக்கில், திட்டம் போடுகின்றனர்.

இந்தத் 'தியாக சீடர்களின்' அலங்கோலத்தைக்காண, கண்ணீர் தான் வருகிறது நமக்கு.

5-ம் பக்கத் தொடர்ச்சி

வேறு காரியமாகக் காணச் சென்ற சில 'வேதனைக் குரல்'கள் வெளியே நின்று கொண்டிருந்திருக்கின்றனர். அவர்களும் உணவுப் பொருள் விஷயமாக, அமைச்சரைக் கண்டு போகவே அங்கே போயிருந்திருக்கின்றனர்.

சென்றவர்கள், சேலத்தைச் சேர்ந்தவர்கள். சேலமோ, பசியும் பட்டினியும் தாண்டவமாடும் பிரதேசம்! ஆகவே, அமைச்சர் உணவுப் பிரச்னையைத் தீர்க்கும் ஆலோசனையிலே இருப்பார்—கவலையோடு கிடப்பார்—என்றெல்லாம் கருதிக்கொண்டு சென்றிருக்கின்றனர். ஆனால் அமைச்சர் மாளிகையிலோ விருந்து நடந்து கொண்டிருந்ததாம்!

பண்டித நேரு போன்றோர் அடிக்கடி கூறுகிறார்களே 'விருந்துகள் சிக்கனமாக இருக்கவேண்டும். முக்கிய உணவுத் தான்யங்கள் இல்லாமல் நடைபெறவேண்டும்'' என்றெல்லாம். அந்த வகையைச் சேர்ந்ததும் அல்லவாம்!

பிரமாதமான விருந்தாம்—அமைச்சரைக் காணச் சென்றவர்கள் கூறியது அல்ல இது. விருந்துக்குச் சென்று திரும்பிய இரு மேலதிகாரிகள் இவ்விதம் பேசிக்கொண்டு வந்தனராம். ஒருவர் 'நடக்கக்கூட முடியவில்லை' என்றாராம். இன்னொருவர், 'ஆகா! எவ்வளவு அருமையான விருந்து' என்றாராம். அவ்வளவு அமர்க்களப்பட்டிருக்கிறது அமைச்சர் மாளிகை! பிரமாதமான விருந்து! அருமையான விருந்து! — வெளியிலே நின்ற, சேலத்துப் பிரதிநிதிகள் திகைத்தனராம். நாட்டில், பாதிக்குதே பசி என்று கூக்குரல் எழுப்புகிறார்கள் மக்கள். ஆனால் நாடாளும், அமைச்சரோ ருசி கொண்ட விருந்து வைக்கிறார்!

இந்தியாவின் கோரநிலை கேட்டு இல்லியனாய்ஸ் பரோபகாரி தண்ணீரைக்காட்டி, பணம் சேகரித்து, கோதுமை அனுப்புகிறார்.

ஆனால் கொடுமை நீக்கப்பாடுபட வேண்டிய உணவமைச்சரோ கும்மாளமடிக்கிறார்.

குருதி கொதிக்கக் கேட்பீர்கள் ''ஏன், இந்நிலை?'' என்று. வேதனையான சம்பவம்தான் இது. ஆனால் என்செய்வது, இதயமில்லாதவர்கள் மத்தியில் சிக்கிக்கொண்டோமே! சாவும், 'பிள்ளையோ பிள்ளை' வியாபாரமும், பட்டினிக்கொடுமை கண்டும், தனது படாடோப மாளிகையிலே பரவசப்படுத்துகிறார் விருந்தாளிகளை.

மக்கள் பிரேதம் ஆகிக்கொண்டிருக்கின்றனர்—அமைச்சரோ பிரமாதமான விருந்து வைத்துக் கொண்டிருக்கிறார். கேவலமான காட்சி!

---

## ஞாயிறு

'ஞாயிறு', தஞ்சையிலிருந்து, பதினைந்து தினங்களுக்கொருமுறை, திராவிடத்தில் வலம் வந்து தோழர்களுக்கு, பகுத்தறிவொளியும், சிந்தனை வெப்பமும் அளித்து வருவது காண, மகிழாதார் யாருமில்லை.

'ஞாயிறு' ஒளி பரப்ப, மூடமதிக் கொள்கைகளெனும் இருள் ஓடி ஒளிகிறது — பழைமைக் காளான்கள் காய்ந்து சருகாய் மண்ணோடு மண்ணாய் மக்கிப் போகின்றன.

'ஞாயிறு', காலையிலே மகிழ்ச்சியும், மதியத்தில் தாங்காத வெப்பத்தால் தவிப்பும், மாலையில், செந்நிற வானத்தில் சென்று மறையும் காட்சி இன்பத்தையும் தருவது போல, மகிழ்ச்சியூட்டும் கற்பனைகளும், திராவிடத்தை எதிர்ப்போர் திக்கு முக்காடச் செய்யும் அரசியல் 'சூடுகளும்', கலையுணர்வெழுப்பும் சிந்தனைச் சித்திரங்களும் இடம் பெறுகின்றன, தஞ்சை 'ஞாயிறில்'!

நம், முன்னணி வீரர்களில் முன் வரிசையிலே உள்ளவர்களில் ஒருவர், செந்தமிழ் ஆர்வலர், இளைஞர் ஏ. கே. வேலன் இதன் ஆசிரியர். வழுக்குப் பாதை வகுக்காத எழுத்து நடையை, இணையாசிரியர் தாமரைச் செல்வனிடம் காண்கிறோம்.

'ஞாயிறு' தஞ்சையிலிருந்து, இயக்கத்திற்கு மற்றுமொரு போர் முரசாக ஒலித்து வருகிறது. தனிப் பிரதி விலை மூன்றணா. இதுவரை மூன்று இதழ்கள் வந்துள்ளன. அரிய 'ஞாயிறை' நமக்களிக்கும் ஆசிரியர்களைப் பாராட்டுகிறோம். அவர்கள் முயற்சி தொடர்ந்து பலன் தரட்டும் என்று விரும்புகிறோம்.

---

## இல்லை!—இருக்கிறது?

மத்திய சர்க்கார் ஒரு சுற்றறிக்கையனுப்பியுள்ளது.

அதில், கல்வி நிலையங்கள் புதிதாக கட்டும் முயற்சியிலீடுபடுவோருக்கு, சிக்கன யோசனை தரப்பட்டுள்ளது,

பணமில்லையாம் அவர்களிடம் — ஆகவே, கட்டிடங்களின் மீது அதிகப்பணம் செலவிட முடியாதாம்.

மத்திய சர்க்கார் மற்ற சர்க்கார்களுக்கு, இந்த 'சாவோலை'யை அனுப்பியுள்ளது.

கட்டிடம் கட்ட பணமில்லை பல்லவி — அதே நேரத்தில் பாருங்கள் இடிந்தகோயிலை கட்டஎத்தனை இலட்சங்கள் செலவிடப்படுகின்றன என்பதை!

சோமநாதர் ஆலயம் மட்டுமல்ல— சென்ற ஆண்டு சிதைக்கப்பட்டு, சமீபத்தில், பக்தர்களைக் காண சுற்றுப்பிரயாணம் வந்த அய்யப்பனாரின் சபரிமலைக் கோயில் திருப்பணிக்கு 5·05-கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கின்றனர். கோயில் நிர்வாகம் பார்ப்போர் இந்தச் செய்தியையும் படிக்கிறோம்.

இரண்டையும் பார்க்கிறபொழுது நம் வேதனை விரியாதா? இந்தக் குறையை யாரிடம் போய்ச் சொல்வது? இடிந்த அய்யப்பன் கோயிலைக்கட்டச்சொல்லி, கோடிக்கணக்கில் பணம் ஒதுக்குகிறார்கள்! பார்க்கிறது சர்க்கார், ஆனால் புதிய கல்வி நிலையங்கள் அமைக்க பொருளில்லாமல், சிக்கனம் பேசுகிறது மத்திய சர்க்கார் இதற்கு அந்த அய்யப்பன்தான் தீர்ப்பளிக்க வேண்டும்! அவருக்கு இப்பொழுது மனிதர்கள் என்றாலே பயம்— ஏனெனில் ஒருவன் இடித்துப் போடுகிறான்—இன்னொருவன் இழுத்துக்கொண்டுபோய், தெருதெருவாய் சுற்றிவருகிறான், வேறொருவன் கோயில் கட்டுகிறான். ஆகவே யாரை நம்புவது என்று தெரியாமல் விழிக்கிறார். அவர் எங்கே நமக்குத்தீர்ப்பு தரப்போகிறார்!

கல்வி நிலையங்கட்ட பணமில்லை— கோயில்கள் புதுப்பிக்க பணமிருக்கிறது! என் செய்வது?

தொடர் கதை

# யாத்திரை

தில்லை-வில்லாளன்

## சுந்தரம்

1

[ஓடிய கதை:- சுந்தரம், தன் காதலி பத்மாவுக்கு தன் உள்ளத்தில் புதைந்து கிடந்த எண்ணங்களை எடுத்துச் சொல்லி வருகிறான். பத்மா அன்றொரு நாள், அவன் எழுதிய ‘அவள்’ நாடகத்திற்கு வந்திருந்தாள், அந்நாடகத்தைப் பற்றி விளக்குகிறான்......]

‘அவள்’ ஒரு உயிருள்ள நாடகம். நீயும் நானும் வாழ்கிற உலகில் எத்தனையோ ‘அவளும், அவனும்’ வாழ்கிறார்கள். அவர்கள் அத்தனைப் பேரும் ஒவ்வொரு வகையான வாழ்க்கையின் உருவங்கள். அவர்களின் மனம் ஒரு அனுபவக் குகை-சம்பவச் சுரங்கம்! ஒருவரின் வாழ்விலே வருகிற நிகழ்ச்சிகள் வேறொருவர் வாழ்விலே வருவதில்லை. வந்தாலும் பல திருத்தங்கள், மாற்றங்கள் புடைசூழத்தான் வந்ததாக நாம் கேள்விப்படுவோம். மனிதனுடைய சரித்திரத்தில் பிறந்தான், வளர்ந்தான், மணந்தான், மடிந்தான்...... என்ற சாதாரண சம்பவங்களை உலகம் இரசிப்பதில்லை. அதற்காகவும் மனிதன் பிறந்ததாகவும் நாம் நினைக்கக் கூடாது. மனிதன் பிறந்தான் என்றாலே வாழத்தான்—வாழ்வதென்றால் சோற்றுத் துருத்தியாக அல்ல, புகழோடு! அப்படி வாழ மனிதன் முயற்சி செய்கின்ற பொழுதுதான் பல நிகழ்ச்சிகளைச் சந்திக்கிறான். சிலவற்றோடு கைகுலுக்குகிறான், இன்னும் சிலவற்றுடன் கைகலக்கிறான்! அந்த நிகழ்ச்சிகளைத்தான் நாடகங்களில் சித்திரிக்கவேண்டும். அப்படித்தான் மல்லிகை என்ற பெண்ணின் வாழ்வில் அடித்த புயலைச் சித்திரித்திருந்தேன்.

மல்லிகை கிராமப் பெண். திடீரென்று ஏற்பட்ட வெள்ளத்தினால் அவர்கள் கிராமமே அழிந்து விடுகிறது. வெள்ளத்திலே மடிந்தவர்களிலே அவளின் பெற்றோரின் பெயர்களும் வந்துவிட்டன! மல்லிகை தனது ஐந்து வயது தம்பி மணியுடன் வெளி உலகை முதன் முதலாகச் சந்தித்தாள். நடந்தாள். அனுபவங்கள் பல அவளை வரவேற்றன. கடைசியில் ஒரு சீமான் வீட்டிலே வேலைக்கமர்ந்தாள். அந்தச் சீமானின் செல்வக் குமரன் மனோகரன். அவளது அழகிலே மயங்கினான். மன்றாடினான். பிறகு வெற்றி பெற்றான். வழக்கம் போலவே கதாசிரியர்கள் கற்பனை அவள் வாழ்விலே உண்மையாகிவிட்டது. இதையெல்லாம் கவனித்து வந்தான் கண்ணன், அவளின் கிராமத்து நண்பன். அவனும் அவ்வூர் மண்டியிலே வேலை பார்த்து வந்தான். அவன் மல்லிகையை மனதார நேசித்தான். அவன் அவளிடம் நெருங்கித் தன் நேசத்தைத் தெரிவிக்கிற பொழுது மனோகரன் வெற்றித் திருநாள் கொண்டாடியாகிவிட்டது. மல்லிகை மறுத்துவிட்டாள், மனதில் கண்ணனுக்கு இடம் இருந்தும்! பிறகு அவன் ஒதுங்கிக்கொண்டான். ஆனால் அவள் வாழ்க்கைப் புத்தகத்தின் ஒவ்வொரு ஏட்டையும் உன்னிப்பாகப் படித்துவந்தான். அவனுக்கு மனோகரனின் மீது நம்பிக்கை வரவரக் குறைந்து வந்தது. ஆனால் மல்லிகையின் வயிற்றிலோ சிசு வளர்ந்து வந்தது! மல்லிகை மணத்தை விரைவாக முடியுங்கள் என்றாள் ஒருநாள், ஜாடையாகக்குறிப்பிட்டு! முதலில் சிரித்து மழுப்பினான். பிறகு சீறி ஒதுக்கினான் அவளை! மல்லிகை அழுதாள், அலறினாள், புலம்பினாள், ஒப்பாரி வைத்தாள்! அவளைத் தேற்றுவார் யாருமில்லை சின்னஞ்சிறு மணியைத் தவிர! கண்ணன் ஒருநாள் அவளைக் கண்டு ஆறுதல் கூறினான். அன்று இரவு பயங்கரக் கொலை நடந்துவிட்டது. மனோகரன் கொல்லப்பட்டான். கண்ணன் குற்றஞ் சாட்டப்பட்டான். வழக்கு நடந்தது. எங்கேயோ ஓடி மறைந்துவிட்டதாகப் பேசிக்கொண்ட மல்லிகை வந்து கொலையாளி, தான் எனக்கூறினாள். கண்ணன் விடுதலை செய்யப்பட்டான். மணியை அவன் கையிலே ஒப்படைத்தாள்—மடிந்தாள் மகிழ்ச்சியோடு! — அவ்வளவுதான். ‘அவள்’ முடிந்துவிட்டது.

என்னை மல்லிகையென்றும், தங்களை கண்ணன் என்றும் கூறிவிட்டீர்களே...அப்படியானால் நான் பட்டிக்காட்டுப் பெண்ணு, வேலைக்காரியாகத்தான் போகவேண்டுமா... என்று கேட்டு விடாதே!...கதையென்றால் அப்படித்தான். தற்குறிப்பேற்றம் என்று அணியிலக்கணத்திலே குறிப்பிடுவார்கள். அப்படித்தான் எந்தக் கதையிலும் ஆசிரியன் தன் ஆவலை நுழைத்துவிடுவான். இதையும் விட்டுவிட்டு விபரீதமான குதர்க்க வாதங்களிலும் இறங்கிவிடாதே! என் வாழ்க்கையிலே வருகிற மனோகரன் யார், மணி யார்... என்றெல்லாம் கேட்டு என்னைச் சங்கடத்தில் மாட்டிவிட்டு; உன் உள்ளத்தையும் புண்ணாக்கிக் கொள்ளாதே! நாடகம் கிடக்கட்டும், வாழ்க்கைக்கு வருவோம் இனி—பத்மா, அன்று ஏற்பட்ட அந்த உணர்ச்சி இன்றும் மடியவில்லை. இனி என்றும் மரித்துவிடாது!

மனம் ஒரு சினிமா படம் காட்டும் இயந்திரம்; முகம் வெண்திரை! உள்ளத்து உணர்ச்சியலைகளை முகத்திலே நன்றாகப் பார்க்கலாம். அப்படித்தான் என் முகத்திலேயும் என் இதயக் குமுறலை, உணர்ச்சிக் கொப்பளங்களைக் கண்டிருப்பாய், பத்மா. சில காட்டாறுகளில் எந்தவித முன்னறிவிப்புமின்றி திடீரென்று தண்ணீர் பெருகும், வெள்ளமாகும், ‘நொப்பும் நொரையுமாய்’ இரு கரைகளையும்

இடித்து நொருக்கிக் கொண்டோடும். அப்படித்தான் என் மனமும்! என் இதய ராணியே, கேள்— எனது மன நாடகத்தை! உன்னைப் பார்க்கிற பொழுதெல்லாம் என் எண்ணம் புரட்சி செய்யும். திருமண வீடுகளில் நீ பார்த்திருப்பாயே, புரோகிதன் வளர்க்கும் நெருப்பை— அவன் ஏதாவது உளறிக்கொண்டு கரண்டி கரண்டியாக நெய்யை எடுத்து ஊற்றுவான். நெருப்பு திடீரென்று அதிகரித்து உடனே சாதாரண நிலைக்கு வரும். அப்படித்தான் உன் 'தரிசனம்' நெருப்பிலே விடும் நெய்யாக மாறி நெஞ்சத்து தீயை அதிக ஜ்வாலையோடு எரித்திடலாயிற்று.

பத்மா, உன்னோடு எத்தனை முறைகள் பேசியிருப்பேன். உலகத்து நடவடிக்கைகள் அத்தனையையும் கூறியிருப்பேன். சைனாவிலே நடந்த போராட்டம், இந்தோனேஷியாவில் ஏற்பட்ட சுதந்திர உணர்ச்சி, பர்மாவிலே பரவி வரும் அந்நிய ஆதிக்க எதிர்ப்புப்போராட்டம், ஐக்கிய நாட்டு சபையின் அவசியம், பாகிஸ்தானின் நாணய முறை, ரஷ்யாவின் போக்கு, அமெரிக்காவின் டாலர் வலை......இப்படி எதையெதைப் பற்றியெல்லாம் பேசியிருக்கிறோம். ஆனால் என் மனதிலே 'நாற்று விட்டிருந்த' அந்தக் காதல் உணர்ச்சியை உன்னிடம் சொல்ல முடியவில்லை. சொல்லக் கூடாது என்பதல்ல, பத்மா! சொல்ல முடியவில்லை என்றால்— அதுதான் உண்மை. சொல்ல பல தடவைகளில் முயற்சி செய்திருக்கிறேன். தோற்றுவிட்டேன். ஏன்? என் நாக்கு பேசும் சக்தியை இழந்து விடுகிறது. நாக்கு புரண்டாலும் ஒலி வெளியில் வருவதில்லை. நெஞ்சக் குழியில் கடக், கடக்...... என்று சிறு சப்தத்துடன் ஒரு நிசப்தம் — சுடுகாட்டு அமைதி! நான் என்ன செய்யட்டும்?

அன்று கடற்கரையில் நான் தனியாகவே உலவி வந்தேன். மனித நாற்றமே இல்லாத மூலையில் என் நிலையற்ற மனத்திற்கு சாந்தி தேடி நடந்தபடியே இருந்தேன். நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைத்ததாம்........என்று வைதீக எண்ணம் உள்ளவர்கள் சொல்வார்கள். தெய்வம் வேறாக நினைத்ததோ என்னவோ, அன்று அங்கு உன்னை அறிமுகம் செய்ய வேண்டியதில்லை, அந்தப்பொல்லாத சந்தர்ப்பம் என்ற குறும்பன்! பத்மா, கடல் மணலைக்கட்டி நீ கூட்டி அழித்திருந்த மணல் வீட்டைப் பார்த்த பொழுது எனக்கு எப்படியிருந்தது, தெரியுமா? நீ நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி,.....என் இதயங்கட்டி வைத்திருந்த காதல்கோட்டையும் இப்படி நிலையற்றுச்சரியும் மணல்வீடுதானா என்று எண்ணினேன். என்கண்களில் திடீரென்று நீர் திரண்டுவிட்டது. அதுவும் உன் கரங்களாலேயே அது அழிந்து விடுமோ என்று எண்ணும்பொழுது இமைகளில் தத்தளித்துக்கொண்டிருந்த நீர்த்துளிகள் கன்னங்களில் வழியத்தொடங்கிவிட்டன. ஆம், பத்மா, நான் அழுதுவிட்டேன். அவ்வளவு பஞ்சு மனம் கொண்டவன் நான்.

வானவெளியைப் பார்த்தேன். அந்த நீலத்திரைக் கடலையும் பார்த்தேன். இரண்டும் முத்தமிடும்காட்சியும் என் கண்களுக்குத் தெரிந்தது. வானம் வளைந்துவந்து அந்த நிர்மலமான ஆழ்கடலை அணைத்துக் கொண்டிருந்தது. அந்த தொலை தூரத்தில் இருக்கும் தொடுவானக் காட்சியைப் பார்த்தேன். என் உள்ளம் அமைதியிலாழ்ந்துவிட்டது. வண்டியிலே மாட்டி காலொடிந்தோடும் நாயைப்போல ஒரே குரைப்புமயம்........திரும்பினேன். அப்பொழுதும் பத்மா, உன் கோட்டைகட்டும் வேலை முடியவில்லை. நீ என்னைப் பார்த்து விட்டுத்தான் அப்படி பாராதுபோல நடித்தாயோ என்னவோ நான் அறியேன். ஆனால் நீ பெரிய குறும்புக்காரி.......என்னைத் தவிக்கவிட்டு வேடிக்கைபார்த்திருப்பாய். வானும் கடலும் நடத்திய காதல் தோற்றம் என்மனதை விட்டு மறையவே இல்லை. என் பத்மாவை ஒருநாள் இப்படித் தழுவி முத்தமிடும் இன்பவேளை வருமோ என்று எண்ணினேன். அந்த ஏக்கத்தின் பிரதிபலிப்பு என் முகத்திலே தோன்றிவிட்டது! இல்லாவிட்டால் உன் அருகில் வந்து நின்றபொழுது நீ அப்படிப்பார்த்திருக்கமாட்டாய்!

"பத்மா, ஏன் இவ்வளவு தூரம் வந்து......" என்றேன் நான்.

"இனிது, இனிது ஏகாந்தம் இனிது!"

என்று கவிதைப் பாடினாய் நீ.

"எப்பொழுதுமே இதேநிலை..."

"அதில் சந்தேகம்ஏன்?" நீ கேட்டாய், சற்று கோபத்துடன்!

"இடைக்கால ஏற்பாடா, அல்லது நிரந்தர கீதமோ?" என்றேன் கிண்டலோடு!

சிரித்துவிட்டாய், பத்மா! ஆனால் அந்த சிரிப்பினால் என்னவிளைவு ஏற்பட்டது என்பது உனக்குத் தெரியாது. வெள்ளம் வருகிறது, அதற்குத்தெரியுமா அது செய்யும் அழிவு வேலை? தெரியாது. புயல் அடிக்கிறது. அந்த 'வாய்வுதேவன்' உணர்வதில்லை அதனால்ஏற்படுகிற கோரச் சம்பவங்களை, ஈடு செய்யமுடியாத சேதங்களை! பூகம்பம் ஏற்படுகிறது. அந்த நில நடுக்கம் தன்னால் ஏற்படுகிற துன்பங்களை, துயரங்களை அறிந்துகொண்டிராது. அறிந்தால் பூகம்பமே ஏற்படாதே! எரிமலை தன்வாயால் கக்கும் நெருப்புக்குழம்புக்குப் புரிவதில்லை அது செய்கிற கொடுமைகள்! அப்படித்தான் இந்தப்பெண்களின் சிரிப்பும்! அவர்களுக்கு என்ன........இலேசாக சிரித்துவிட்டு எத்தனை வாலிபர்களின் இதயங்களைச் சுக்கு நூறுக்குகிறார்கள். சேதமடைகிறதை ஈடு செய்ய யார் நிவாரணக் கமிட்டி அமைத்து நிதி சேர்த்துத் தரப் போகிறார்கள்? வாலிப உலகில் பெண்களின் சிரிப்பிற்கு அதிக மதிப்பு — மதிப்பென்ன, பெரிய ஆராய்ச்சியே செய்ய விஞ்ஞானிகள் ஏராளம்! குமரியின் குறுநகை ஒரு அணுக்குண்டு — அது விழுந்த இடம் வாலிப இதயமானாலும், வயோதிக உள்ளமானாலும் ஹிரோஷிமாவேதான்! பத்மா, அந்தகொல்லும் சிரிப்பினால்தான் நான் பித்தனானேன்.

வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

"அதோ வானத்தில் பாருங்கள் ஒளிவிடும் நட்சத்திரங்களை........ எவ்வளவு அழகாக இருக்கின்றன!" என்றாய் நீ

"அழகுப் பொருள்களெல்லாம் எட்டாத தூரத்தில்தான் இருக்குமோ?" என்றேன் நான்.

"ஏன்........" இழுத்தாய், என் குறிப்புணராமல்!

(தொடரும்)

# தேனீக்கள்

வரிவாங்கவும் முடியவில்லை!

வரி போடாமலிருக்கவும் முடியவில்லை!

இந்த விசித்திர நிலை, வேறெங்குமில்லை. நமது காங்கிரசாட்சியில்!

அவர்கள் போடாத வரிகளில்லையென்று கூறிடும் நிலை வந்துவிட்டது!

அதுவும், ஆண்டுக்கு ஆண்டு உயர்த்தாமலிருப்பதில்லை.

அவர்கள் நாட்டிலே, தாங்கள் உயர்ந்த கட்சி என்று காட்டிக்கொள்ள எதைச் செய்யாவிட்டாலும், உணவுப் பொருள்களின் விலையை உயர்த்தி விட்டார்கள்—துணியின் விலையை உயர்த்தி விட்டார்கள். ரயில்வே கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள். தபால் தந்தி கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள்! அவர்கள் உயர்ந்தவர்கள்! ஆகவே உயர்த்தியுள்ளனர்.

இதுபோலவே, வரிகளை உயர்த்தியுள்ளார்கள்.

உயர்த்தட்டும் — குறைக்கட்டும், எப்படியோ போகட்டும் — ஆனால் போடும் வரியைக்கூட, வசூல் செய்ய திறமையில்லை யென்றால், அவர்கள் ஆளத் தெரியாதவர்கள் என்றுதானே அர்த்தம்! யார்தான் இதைக் கேட்டு சிரிக்காமலிருப்பார்.

வருமான வரிவிதிப்பில் வசூலிக்கப்படாமல் நிற்கும் தொகை ரூ. 117-கோடி.

வருமான வரி செலுத்தாதவர்கள் பலர் — அவர்கள் எப்படியும், ஏதாவது கொடுத்து விட்டு, இந்த விவகாரத்தை முடித்துக்கொண்டால் நல்லது என்று எண்ணுகிறார்கள். ஆனால் பயம் குறுக்கிடுகிறது. இத்தனை ஆண்டுகள் கட்டாமலிருந்ததால், சர்க்கார் ஏதாவது தண்டனை தருமோ என்ற அச்சம் அவர்களைப் பிடித்தாட்டுகிறது. அந்தபயம்போக மார்க்கம் காட்டவேண்டும் என்று நிதி மந்திரி தேஷ்முக் பேசியுள்ளார்.

அப்பொழுது, அவர்களாகவே வந்து செலுத்திவிடுவராம்.

இப்படிப் பேசிடுபவர், வழிப்போக்கரல்ல, நிதி மந்திரி! அவர் நினைத்தால், வரி வசூலிக்கச் செய்யும் எல்லா வசதிகளும் இயங்கும்! அவர் கணக்கு தருகிறார் வராது நிற்கும் தொகை இவ்வளவென்று!

வாழ்வளிக்கத்தான் தெரியாது இவர்களுக்கு என்று நினைத்திருந்தோம் — இவர்களுக்கு வரி வசூலிக்கும் 'துப்பும்' இல்லையென்று புரிகிறது, இப்போது!

வரி, நீதியின் பாற்பட்டதா, அநீதியானதா என்ற வாதம் ஒருபுறமிருக்கட்டும். போடுகின்ற வரியையாவது ஒழுங்காக வசூல் செய்ய போக்கியதையில்லாதவர்களை எப்படி நம்மாள்வார்களாக ஏற்றுக்கொள்ள முடியும்?

நிதிமந்திரியை விட ஒருபடி மேலே சென்றுள்ளார் துணைநிதி மந்திரி தியாகி!

அவர் வேடிக்கைக்காகச் சொன்னாரோ, அல்லது உண்மையிலேயே சொன்னாரோ, நாமறியோம்.

வரி கொடுப்போர் மலர்கள்

வசூலிப்போர் தேனீக்கள்

என்று உவமை காட்டி, தேனீக்களைப்போல, சிறுகச் சிறுக வாங்க வேண்டுமாம், வராத வருமான வரியை! அப்பொழுதுதான் அவர்கள் ஒத்துழைப்பார்களாம்!

இதுவரை வருமானவரி தராதிருப்போர் யாராக இருக்கமுடியும்? யோசியுங்கள். அதுவும் கோடிக்கணக்கில் பாக்கியென்றால், அந்த வரி தரவேண்டியவர்கள் ஏர் பிடிக்கும் ஏகாம்பரமும், மூட்டை தூக்கும் முனியனும், வண்டியிழுக்கும் வரதனும், என்றா நினைக்கிறீர்கள்! இல்லை.

பணம் படைத்தோர் — பதுக்கி வைத்தோர்—ஆகவே பாராள்வோர் பயப்படுகின்றனர்.

வரி செலுத்தத் தவறியவர்கள் பாம்பு — அவர்களிடம் ரத்தினம் இருக்கிறது. மோடியெடுத்துஊதுங்கள் என்று கூறவில்லை.

அவர்கள் மனம் நோகாமல், வரி வசூலிப்போர், நள்ளிரவிலே கள்ளராகுங்கள் என்று கூறவில்லை.

தேனீக்களாகச் சொல்கிறார் — அது தெளிவாகச் சொல்கிறது, இவர்கள் ஆளத் தெரியாதவர்கள் என்று! அந்த உவமைப்படியே பார்த்தால், மலர்களிலிருந்து, தேனீக்கள் சேர்த்து வைத்திருக்கும் தேனையெல்லாம், தீப்பந்தத்துடன் வரும் வேடன் கொண்டு போய்விடுகிறானே! அப்படித்தான் நடைபெறுமா, நாம் தரும் வரிப்பணம் எல்லாம் என்று மக்கள் நினைத்தால் என்ன ஆவது?

தேனை உறிஞ்சிடும் தேனீக்களாலே, மலருக்கு இலாபம்உண்டு. மகரந்த ஸ்பரிசம் ஏற்பட வழி செய்கிறது! இப்படி, இந்த தியாகி அனுப்பும் 'தேனீக்களால்' அவர்களுக்கு ஏதேனும் 'புதுவித' இலாபம் உண்டா என்று கேட்கத்தோன்றும்!

ஆம், வாழ்வளிக்கத் தெரியாத இவர்களுக்கு, வரி வாங்கவும் தேனீயுமாவார்கள்—தெளிவில்லாததால், தேளுமாவார்கள்! யார் கண்டார்கள்!

## ★ வழக்குகள் ★

டில்லி மந்திரி முன்ஷிக்கு கருப்புக் கொடி பிடித்தது சம்பந்தமாக ஆட்சியாளரால் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த சென்னை கழக வீரர்களான என். வி. நடராசன், கே. கோவிந்தசாமி, பி. வி. முத்துசாமி, எம். ஆர். பாண்டியன், செல்லக் கண்ணம்மாள், ஆர். இரத்தினம், கார்ப்பரேஷன் கவுன்சிலர் வி. முனுசாமி ஆகியோரை விடுதலை செய்து, 8—5—51 அன்று சென்னை 3-வது மாகாண மாஜிட்ரேட் தீர்ப்பு கூறினார்.

கழகத் தோழர்கள் சார்பில் பிரபல வழக்கறிஞர் ஏ. துரைராஜ் அவர்களும், திருமலைசாமி பி. ஏ., பி. எல்., அவர்களும் வாதாடினர்.

* * *

பேச்சுரிமைக்காக குன்றத்தூரில் போராடிய தோழர் என். வி. நடராசன் மற்றும் 22 கழக வீரர்கள் மீது தொடரப்பட்டிருந்த வழக்கு சைதாப்பேட்டை கோர்ட்டில், ஆறு மாதங்களாக நடைபெற்றுக் கொண்டே வருகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தால் காயமடைந்தும், மூவர் மீது வழக்கு தொடர்ந்திருந்தது காங்கிரஸ் ஆட்சி. இப்போது அந்த மூன்று தோழர்கள் மீதிருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கழகத் தோழர்களுக்காக வழக்கறிஞர் அனந்தராமன் வாதாடி வருகிறார்.

# காமத்- தரும் பாடம்

மூடு, மூடு
வாயை மூடு
உரக்கப் பேசாதே
ஊர் சிரித்திடும்

இந்தக் கீதம் பாடாத, காங்கிரஸ் தோழர் இன்று இல்லை.

எங்கும், இன்று, இதே உபதேசம் புரிகின்றனர்.

தலைவர்கள் இதையே பாடுகிறார்கள். தொண்டர்கள் இதையே இசைக்கிறார்கள்-ஆனால் வெவ்வேறு இராகங்களில்!

பொதுக் கூட்டங்களிலும், இதே போதனை-கமிட்டிக்கூட்டங்களிலும் இதே தீர்மானம்!

'மூடு' பாடலை, காங்கிரஸ் காரர்கள் பாடுகிறார்கள். ஆனால் பொது மக்களோ, வேறு பாடலை, பாடத் தொடங்கி விட்டார்கள்.

காங்கிரஸ் பாட்டுக்கு எதிர்ப் பாட்டுப் பாடுகிறார்கள்!

எங்கெங்குக் காணினும்
ஊழலடா-தம்பி

அது இல்லாத இடம்
இல்லையடா-காங்கிரஸில்

என்று பாடுகிறார்கள்.

பிரகாசம் வாயை மூட அவர்கள் பட்ட பாடு, தினத்தாள்கள் அறியும் - அதைப் படித்தோரின் விழி சொரியும் நீர்! அவ்வளவு முயற்சிகளும் வீணாயின.

பிரகாசம் பேசினார் - மந்திரிகளையெல்லாம் கூண்டிலே நிறுத்திப் பேசும் வழக்கறிஞர் போலவே வாதிட்டார். குற்றவாளிகளோ கேலி பேசினர்—தண்டனை பெறவில்லை!

பிறகு, ஒவ்வொரு காங்கிரஸ் கமிட்டியிலும், பிரகாசம் தோன்ற ஆரம்பிக்க, காங்கிரஸ் மேலிடம் பயப்படத் தொடங்கி விட்டது.

இருட்டு இருக்கும் வரை, எது எங்கிருந்தாலும், எவர் எப்படிக் கிடந்தாலும் வெளியில் தெரிவதில்லை. ஆனால் பிரகாசம் ஏற்பட்டால், பதறி யெழுந்து, தங்கள் நிலையைச் சரிப்படுத்திக் கொள்வர்.

அது போலவே காங்கிரஸ் மேலிடம், தீர்மானம் போட்டது, காங்கிரஸ் காரர்கள் வெளியில் ஊமைகளாக வேண்டுமென்று! ஆனால் பலிக்கவில்லை!

அவர்களைப் பற்றி யார் பேசினாலும், அவர்கள் வாயை மூடதுடித்தார்கள்.

தியாகி, முதலில் இப்படிப் பேசிக் கொண்டிருந்தாரென்று மந்திரியாக்கி விட்டனர்! அவர்கள் தந்திரம் பலித்து விட்டது.

மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த எச். வி. காமத் ஆட்சியாளரின் போக்கை அடிக்கடி கண்டித்து வருபவர்-இருந்தாலும் அவர்களுக்குள்ளே ஒருவர்தான்!

அவரை முதலில் எச்சரித்தனர். எச்சரிக்கை, தந்தவர்களுக்கு எரிச்சலைத் தந்ததோடு நின்று விட்டது.

அவர் மீதுஒழுங்கு நடவடிக்கை எடுக்க சிபார்சு செய்தனர்.

காமத், கலங்கிவிடவில்லை—கண்டனக் குரலொடுதான் விடையளித்துள்ளார்.

வலுவான எதிர்க்கட்சியுமில்லாத நேரத்தில், கண்மூடித் தனமாக, கட்சியின் திட்டங்களை ஆதரித்து, அடங்கிப் போவது ஆபத்து என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

வாய்மூடும் முயற்சி, கூடும் அவையின் மதிப்பையும் பெருமையையும் கெடுக்குமே தவிர வளர்க்காது என்றும் கூறியுள்ளார்.

'மூடு வாயை' என்று கூறும் போக்கு ஆளும் கட்சிக்கு கூடாது. அது கூடும் அவை, மக்களின் மனதைப் படம் பிடித்துக் காட்டிடும் கண்ணாடி, மக்கள் மனோரதத்தை நிறைவேற்றிடும் அமைப்பு என்... தற்கு நேர் விரோதமாகிவிடும் என்... பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

பார்லிமெண்ட் கட்சிக் கூட்டம் காமத்துக்கு கடைசி எச்சரிக்கை தரும்படி தீர்மானித்திருக்கிறது. அவரை நீக்கச் சொல்லவில்லை!

இப்பொழுதெல்லாம், காங்கிர... லிருந்து நீங்கிக் கொள்வோர் தொகை வளர்கிறதே ஒழிய நீக்கும் கஷ்டத்தை யாரும் கட்சிக்கு வைக்கவில்லை.

காமத், அடங்கிவிட்டேன் என்று கூறிவிடவில்லை! அடைக்கலம் தருக என்று மண்டியிடவுமில்லை!

இப்படி, ஒவ்வொருவர் வாயை மூடி, எத்தனை நாள்கள்தான் ஆட்சி செய்துவிட முடியும்? நாட்டிலே நாலுபேர் மத்தியிலே உலவ... இயலும்?

இவர்கள் போக்கு புரியாததா... இல்லை—நன்றாக புரிகிறது!

அழியும் அவசரத்தில் எதைச் செய்வது, எதைச் செய்யக் கூடாது என்று தெரியாமல் கூட காரியங்கள் செய்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது!

காமத் வாய்மூடிக் கொள்கிறார் என்றே வைத்துக் கொள்வோம். வேறொரு காமத் உண்டாகமாட்டார் என்பது என்ன நிச்சயம்?

தமிழ் நாடெங்கும் அறிவுச்சுடர் பரப்பும் ஒரே மாதப் பதிப்பு!

"பகுத்தறிவு"

[ஆசிரியர்;- ப். கண்ணன்]

எங்கும் ஏராள விற்பனை!
தேவை!! சென்னை நகருக்கு
விற்பனையாளர் தேவை!!!

விவரங்கட்கு:—

'பகுத்தறிவு' அலுவலகம்,
சலகண்டாபுரம், சேலம் மாவட்ட...

A.

Edited Printed & Published by C. N. Annadurai M. A at DravidaNadu" Press
95. Tirukkachinambi Street Kancheepuram'